Toronto Community Housing

# யன்னல் குளிரூட்டி மாற்றீட்டுத்திட்டத்தின் இற்றைப்படுத்தல் (Update)



**ரொறோன்ரோ சமூக வீடமைப்பு, பாதுகாப்புக் கருதி, குடியிருப்பாளர்கள் யன்னல் குளிரூட்டிகளைப் பொருத்துவதற்கு இனிமேலும் அனுமதி அளிக்காது.**

**எமது கட்டடங்களிலிருந்து எல்லா யன்னல் குளிரூட்டிகளையும் அகற்றுவதற்கு ஒரு கட்டங்கட்டமான அணுகுமுறையைப் பயன்படுத்துகிறோம். குடியிருப்பாளர்கள் தமது அகற்றப்பட்ட யன்னல் குளிரூட்டிக்கு மாற்றீடாக தரையில் வைக்கக்கூடியதும் தூக்கிச் செல்லக்கூடியதுமானவகைக் குளிரூட்டி ஒன்றைக் கட்டணமின்றி மாற்றீடு செய்து கொள்ளலாம்.**

மாடத்திற்குள் அமையாத யன்னல் குளிரூட்டிகளை, இந்தப் பனிக்காலத்தின் போது அகற்றி நாம் முன்ஏற்பாட்டு நடவடிக்கைகள் செய்துள்ளோம். ஏற்கனவே யன்னல் குளிரூட்டிகள் அப்புறப்படுத்தப்பட்டுள்ள குடியிருப்புகளை, இந்த மாற்றீட்டுத் திட்டத்தில் இணையுமாறு இப்போது நாம் அழைக்கின்றோம்.

இந்தக் குடியிருப்பாளர்கள் **416-981-5500** என்னும் இலக்கத்தை அழைக்கலாம் அல்லது **help@torontohousing.ca** என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பித் தமது அகற்றப்பட்ட குளிரூட்டிக்குப் பதிலாக ஒரு தரையில் வைக்கும்வகைக் குளிரூட்டியை கட்டணம் ஏதுமின்றி மாற்றீடு செய்து கொள்ளலாம்.

2020 குளிரூட்டல் பருவகாலத்திற்கு உரிய நேரத்திற்குள் எல்லா மாற்றீடுகளும் செய்யப்படும்.

மாடத்திற்குள் அமைந்த யன்னல் குளிரூட்டிகளை இன்னமும் கொண்டிருக்கும் குடியிருப்புகள் மேலதிக அறிவிப்பு வரை அவற்றைத் தொடர்ந்து பயன்படுத்தலாம்.

உங்களுக்குக் கேள்விகள் ஏதும் இருப்பின், சேவைபெறுநர் பராமரிப்பு நிலையத்துடன் (Client Care Center) **help@torontohousing.ca** அல்லது **416-981-5500** என்னும் இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

இந்தச் சுவரொட்டியை, பெறக்கூடிய வடிவமைப்பில் அல்லது மொழிபெயர்க்கப்பட்ட வடிவத்தில் கேட்டுப்பெற, தயவுசெய்து மேற்கூறிய தொலைபேசி இலக்கத்தில் அல்லது மின்னஞ்சல் முகவரியில் தொடர்புகொள்க.